**MCOP.37/ 2023- PW1 .**

**திரு.மஞ்சுநாத், த/பெ.பெட்டப்பா**

**நாள்:17.07.2025.**

**குறுக்கு விசாரணை 1 வது எதிர்மனுதாரர் தரப்பில் :**

1 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்படுகிறது.

**குறுக்கு விசாரணை 2 வது எதிர்மனுதாரர் தரப்பில்.**

நான் ஓட்டி சென்ற இருசக்கரவாகனம் என்னுடையது தான். அந்த வாகனத்திற்கு காப்பீடு திட்டம் உள்ளது. எனக்கு இருசக்கரவாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் LLR உள்ளது. நான் தான் எனது இருசக்கரவாகனத்தை ஓட்டி சென்றேன். எனக்கு பின்னால் உட்கார்ந்து வந்தவர் பெயர் லோகேஷ். லோக்கேஷ்க்கு இருசக்கரவாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநார் உரிமம் உள்ளாதா என்றால் இல்லை. எனக்கு LLR மட்டும் இருக்கின்ற காரணத்தினால் எனக்கு பின்னால் உட்கார்ந்து வருவரும் முறையான ஓட்டுநர் உரிமம் வைத்து இருந்தால் மட்டும் தான் இருசக்கரவாகனத்தை நான் ஓட்டிசெல்லமுடியும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பின்னால் உட்கார்ந்து வந்தவருக்கு ஓட்நர் உரிமம் இல்லாததாலும் எனக்கு LLR மட்டும் இருப்பதாலும் பின்னால் உட்கார்ந்து வந்தவருக்கு ஓட்டுநார் உரிமம் இல்லாமல் நான் அவரை வைத்து LLR மட்டும் வைத்து இருசக்கரவாகனத்தை நான் ஓட்டி இருப்பது மோட்டார் வாகன சட்டவிதிகளுக்குஎதிரானது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்ததாக சொல்லப்படும் பகுதி கொண்டை ஊசி வளைவு பகுதி என்றால் சரிதான். நான் மலையில் இருந்து கீழ் நோக்கி வாகனத்தை ஓட்டி வந்தேன் என்றால் சரிதான். எதிரே வந்த பிக் அப் வாகனம் மேல் நோக்கி மலையில் ஏறிகொண்டிருந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் குற்ற எண்.116/2021 ல் காவல் உதவி ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் உள்ளவாறு தான் விபத்து நடந்த இடம் இருந்தது என்றால் சரிதான். அந்த மாதிரி வரைபடம் **எ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பொதுவாக மலை மீது வாகனம் ஏறும் போது மெதுவாக தான் செல்லமுடியும் என்றால் எதிரே வந்த பிக் அப் வாகனம் லோடு இல்லாமல் வேகமாக வந்து மோதியது. பிக் அப் வாகனம் அதனுடைய ரோட்டில் இடது புற ஓரமாக தான் சென்றது என்றும் நான் தான் வலது புறம் ஏறி சென்று பிக் அப் வாகனத்தின் மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தானது எனது அஜாக்கரதையாலும், கவனக்குறைவாலும் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் சம்மந்தப்பட்டுள்ள பிக் அப் வாகனத்தின் ஓட்டுநருக்கு பேட்ஜ் இல்லாததால் அவர் மோட்டார் வாகன சட்ட விதிமுறைகளை மீறி இருப்பதால் 2 வது எதிர் மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல என்றும் நான் 1 வது எதிர்மனுதாரரிடம் தான் ஏதாவது இழப்பீடு கோரவேண்டும் என்றால் அவரிடம் தான் கேட்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் விவசாயம் செய்வதற்கும், காய்கறி விற்பனை செய்வதற்கும் மாதம் ரூ.30 ஆயிரம் வருமானம் ஈட்டுவதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்கால மருத்துவ செலவிற்கு நான் மருத்துவரிடம் சான்று பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிறைய மருத்துவ பில்களில் நான் பணம் செலுத்தியதற்கு மருத்துவமனை முத்திரையோ, மருத்துவமனை அலுவலர்களின் கையெழுத்தோ எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் மருத்துவமனை பில்களை நான் சம்மந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகத்தின் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டுளளேன் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்றும் விபத்தினால்

எனக்கு நிரந்தர ஊனமோ, செயல் திறன் பாதிப்போ, வருமான இழப்போ ஏதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தானது எனது அஜாக்கரதையாலும், கவனக்குறைாவாலும் மற்றும் நான் LLR மட்டும் வைத்து வாகனத்தை இயக்கி இருப்பதால் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கப்படும் போது மேற்கண்ட சங்கதிகளுக்காக இழப்பீடு தொகையை குறைத்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை மிக அதிகம் என்றும் 1 வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு பேட்ஜ் இல்லாததால் 2 வது எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.